**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**
(Chapter XXIII Cr.P.C)

**CMP.NO.955/2025**

**WITNESS NO.–1**

**Date: 07.02.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ரகேஷ்குமார் | வயது | 44 |
| கணவர்/தந்தை பெயர் | தட்சிணாமூர்த்தி | தொழில் | |
| கிராமம் | | வட்டம் | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the 0**7th day of February, 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**<u>பிரமாண வாக்குமூலம் –</u>**

1. கடந்த 2016 ஆண்டு ஸ்டேட் பேங்க் ஆப் ஆசோசியேசன்ஸ் மூலமாக வீடு வாங்கினோம். பேங்க் அப்ருவல் உள்ளதால் பேங்க் மீது முழு நம்பிக்கை வைத்து வீடு வாங்கினோம். அந்த அப்ருவலில் கமர்சியல் காம்பிலக்ஸ்ம் அடங்கும். எங்களுக்கு இரண்டு Contract அக்ரிமட் போட்டுள்ளார்கள். அது இரண்டும் வெவ்வேறு பிரிப்படாத பாகத்தை 106 சதுரடி குறைவாக கொடுத்தார்கள். அக்ரிமட்டில் 575 கதுரடி. ஆனால் பத்திர பதிவில் 468. ஆனால் பேங்க் 578 ஐ கணக்கில் வைத்துக்கொண்டு லோன்

தந்தார்கள்.

2. நாங்கள் கொடுத்த பணத்தில் 28.1 ஏக்கர் வாங்கியதாக கூறினார்கள். ஆனால் புராஜெட்டில் விஸ்திரணம் 21.33. அதில் 4 ½ ஏக்கர் எங்களுக்கு தெரிவிக்காமலேயே போஸ்ட் அக்கடாமியாக மாற்றப்பப்பட்டுள்ளது. மீதம் உள்ள 2 ஏக்கர்கள் என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. பஞ்சாயத்துக்கு தனமாக கொடுத்த இடத்தை பில்டர் வாங்கி உள்ளார். அதற்கு டீடிசிபி அனுமதி கோரவில்லை. கமர்சியல் காம்பல்ஸ்க்கு வீட்டு லோன் மூலம் கடன் கொடுத்தது ஆர்.பி.ஐ சட்டம் படி தவறாகும். நாங்கள் 2023 ஆம் ஆணடு பிரதமருக்கு புகார் எழுதினோம். அது சம்பந்தமாக கமர்சியல் காம்பல்ஸ்க்கு அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னார்கள்.

3. ஆனால் பேங்க் அப்ருவலில் கம்ர்சியல் காம்பில்ஸ்க்கும் அடங்கும். எங்களுக்கு பொய்யான தகவல் அளித்தனர். முடிக்கப்படாத கட்டிடத்திற்கு முழு லோன் தொகையும் கொடுத்துள்ளனர். பேங்க் ஆய்வு செய்ததாக ஆர்.டீ.ஐ தகவல் தர மறுக்கிறார்கள். கட்டுமான ஒப்பந்தம் கூடுவாஞ்சேரி ரிஜிஸ்டரிடம் ரிஜிஸ்டர் செய்து இருக்க வேண்டும் ஆனால் முன் தேதியில் பணம் கட்டியது போல் கணக்கு காட்டி அரசாங்கத்தை ஏமாற்றியுள்ளார்கள். ஒரு கட்டிடத்திற்கு ஒரு கட்டிட ஒப்பந்தம் தான் கொடுக்கவேண்டும். ஆனால் அவர்கள் இரண்டு கொடுத்துள்ளனர். எதற்காக என்றால் கமர்சியல் காம்பிலஸ்க் பிரிக்கபடாத பாகத்தை இரண்டாவதாக கொடுத்த கட்டிட ஒப்பந்தத்தில் இருந்து நீக்கிவிட்டனர்.

4. எங்களுக்கு லோன் கொடுத்தது அதிகமான பிரிக்கப்படாத பாகத்தை வைத்து கொடுத்தார்கள். குறைவான கட்டிட ஒப்பந்ததை வைத்து பதிவு செய்தனர். கமர்சியல்

காம்பிலஸ்க் ஆவுசின் லோன்சில் வராததால் பாரத வங்கி ஊழியர்கள் தெரிந்தே இந்த சதி செயலில் ஈடுபட்டனர். அதனால் கமர்சியல் காம்பில்ஸ்க் உள்ள 46 சென்டை மொத்தமாக புராஜெட்டில் இருந்து நீக்கிவிட்டனர். ஆனால் புராஜெட்டில் அப்ருவலில் கமர்சியல் காம்பிலஸ் கட்டிடமும் மற்றும் இடமும் அடங்கும். நான் எத்தனை முறை ஆர்.டீ.ஐ யில் கேட்டாலும் அவர்கள் தர மறுக்கிறார்கள். அது சம்பந்தமாக ஆர்.டீ.ஐ மூலமாக கேட்தற்கு 575 சதுரடி தான் நாங்கள் அளவு அடமானம் எடுத்துக்கொண்டதாக பொய்யான தகவல் கொடுத்தார்கள்.

5. போலிஷ்சன் கண்ரோல் போர்டில் 4 எஸ்.டி.பி என்பதை மறைத்து ஒரு எஸ்.டி.பி இருப்பது போல் டாக்குமெட் சமர்பித்துள்ளார்கள். ஆனால் டீ.டி.சி.பி பிளானில் 4 எஸ்.டி.பி உள்ளது. டீ.டி.சி.பி கொடுத்த பிளானை மீறக் கூடாது என்று என்விரான்மேட் கிளியரன்ஸ் சான்றிதழ் அளித்துள்ளனர். 225 வீடுகள் விதிமீறலால் கட்டப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக வெளியேற்றப்படும் நோட்டிஸ் ஆகஸ்ட் 2024 அன்று ஒட்டப்பட்டுள்ளது. இந்த வீடுகளுக்கும் பேங்க் லோன் கொடுத்துள்ளது. RSTU ல் 345 வீடுகளுக்கு DTCP ல் அப்ருவலில் கார் பார்கிங் வசதி கிடையாது. இதற்கும் வங்கி லோன் கொடுத்துள்ளது. சர்விஸ் சார்ஜ் சம்பந்தமாக GST வுடன் தான் விற்பனை செய்தார்கள். ஆனால் அந்த GST பணத்தை அரசாங்கத்திடமும் செலுத்தவில்லை மற்றும் மக்களிடமும் பணத்தை திருப்பி கொடுக்கவில்லை.

6. இந்த GST சம்பந்தமாக ஆடர் போட்டுள்ளர்கள். அதனை நான் நீதிமன்றத்தில் சமர்பிததுள்ளேன். இந்த புராஜெட் சம்பந்தமாக லோக்கல் எட் ஆபிஸ், SBI அதிகாரிகள் மற்றும் புரோமட்டரின் புரித்தலின் பேரில் நடந்தது. தவறு என்று தெரிந்தே அவர்கள்

செய்தார்கள். லோன் அமோன்ட் சரியாக பயன்படுத்தவில்லை. லோன் கொடுத்த நோக்கம் மீறப்பட்டுள்ளது. வங்கியின் விதிகள் மீறப்பட்டுள்ளது.ஆர்.பி.ஐ விதிகளும் மீறப்பட்டுள்ளது. அதிகபடியாக மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கை சமர்பிக்கப்பட்டு அதற்கு ஏற்ற போல் எங்களுக்கு ஒரு சதுரடிக்கு இவ்வளவு என்று ரூ.2975/- ஒரு சதுரடி என்ற மதிப்பீட்டில் வசூல்செய்தார்கள்.

7. இந்த புராஜெட் சம்பந்தமாக பில்டர் அவர்கள் புரான்சிங்காடில் செய்தார்கள். ஆனால் இது வரை மக்களுக்கு தரவில்லை. ஆகவே சமுக நலனை கொண்டு இவர்கள் செய்த குற்றத்திற்கு தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.